(ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சிப் பணிகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஜே. முகம்மது கனி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு நிதியமைச்சரின் சார்பாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு .கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

புதுக்கோட்டை மாவட்டம் வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்கப்பட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் வறட்சி நிவாரணத்தின் கீழ் குடிநீர்ப் பணிகளுக்கு ரூ. 107.15 இலட்சம் அனுமதிக்கப்பட்டு 20-11-86 வரை ரூ. 48.12 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர வடிமுனைக் கிணறுகள் இருந்த இடங்களில் ஆழ் துளைக் கிணறுகள் அமைக்க ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 50 இலட்சம் இதர ஊரகப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க நிதியினை திருப்பப்பட்டுள்ளது. இந்தப் பணிகளை இந்த மாத (நவம்பர்) கடைசி வாரத்தில் தமிழ்நாடு குடிநீர் வாரியம் மேற் கொள்ளவிருக்கிறது. மேற்குறிப்பிட்ட 48.12 இலட்சம் ரூபாயில் கீழ்க்கண்ட குடிநீர்ப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:—

1. ஊரகப் பகுதிகளில் 125 கைப்பம்புகளும், கரம்பக்குடி, அரிமளம், அன்னவாசல் மற்றும் கீரமங்கலம் ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் மொத்தம் 6 கைப்பம்புகளும் அமைக்கப்பட்டுள்ளன.

2. லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதற்கு ரூ. 1,39,000 செலவு செய்யப்பட்டுள்ளது.

3. குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அறந்தாங்கி நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 10 இலட்சத்தில், இதுவரை ரூ. 5 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

4. குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை நகராட்சிக்கு ரூ. 4.18 இலட்சம் செலவில் 14 கைப்பம்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

5. இம் மாவட்டத்தில் இதுவரை 163 ஆழ்துளைக் கிணறுகளும், 17 பதிலீட்டு ஆழ்துளைக் கிணறுகளும் அமைக்கப் பட்டுள்ளன.

விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புப் பணிகள் 30 9.86 வரை,

1. பொதுப் பணித் துறை.

இம்மாவட்டத்தில் பொதுப்பணித் துறையின் கீழ் 82 பணித் திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு அவற்றுள் 43 பணித் திட்டங்கள் ரூ. 32.45 இலட்சத்தில் ஊரகப் பகுதிகளில் நிறைவேற்றப்பட்டன. இதன் மூலம் ரூ. 1.556 இலட்சம் மனித வேலைநாட்கள் உருவாக்கப்பட்டன.

2. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள்.

இத்துறையின் கீழ் 60 பணிகள் ஊரகப் பகுதிகளில் நிறைவேற்றப்பட்டன. ரூ. 64.71 இலட்சம் செலவு செய்யப்பட்டு 4.163 இலட்சம் மனித வேலைநாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

3. வேளாண்மை பொறியியல் துறை.

இத்துறையில் 10 பணித் திட்டங்கள் மொத்தம் ரூ. 9.18 இலட்சம் செலவில் ஊரகப் பகுதிகளில் நிறைவேற்றப் பட்டுள்ளன.

4. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்.

இத் திட்டத்தின் கீழ் ரூ. 46.68 இலட்சம் செலவில். 3.36 இலட்சம் மனித வேலைநாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

5. ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்.

இத் திட்டத்தின் கீழ் 956 பணிகள் ரூ. 64.96 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டு 4,026 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இது மட்டுமல்லாது ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் ஆகியவை தங்களிடம் உள்ள 'உபரி நிதியினை' பயன்படுத்தி விவசாயத் தொழிலாளர்கள் பணித் திட்டங்களை உருவாக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டார். இந்த வகையில் உபரி நிதியுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் ரூ. 18.52 இலட்சம் செலவிட்டுள்ளன.

மேலும் 30-9-86—க்குப் பின்னர் 19-11-86 வரை கீழ்க்குறிப் பிட்டவாறு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன,

துறை.	செலவு செய்யப்பட்டத் தொகை (ரூபாய் இலட்சத்தில்).	உருவாக்கப்பட்ட மனித வேலை நாட்கள் (இலட்சத்தில்).
1. பொதுப் பணித் துறை (விவசாயத் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புகள்)	26.33	1.1630
2. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித் துறை.	5.69	0.3591

3. வேளாண்மைப் பொறியியல் துறை	2.73	0.1989
4. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்.	12.64	0.3850
மொத்தம் ..	47.39	2.1060

முடிவுரை.

இம்மாவட்டத்தில் 19-11-86 வரை மொத்தம் ரூ. 265.37 இலட்சம் வரை விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புப் பணிகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது. குடிநீர்ப் பணிகளுக்காக ரூ. 48.12 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், இம் மாவட்டத்தில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் வகையில் ரூ. 50 இலட்சம் வேறு பணியிலிருந்து திருப்பப்பட்டதன் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(இ). நாகர்கோவிலிலுள்ள நாகம்மாள் மில்ஸ் தொழிலாளர்கள் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஜே. ஹேமச் சந்திரன், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையில் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

நாகர்கோவிலிலுள்ள நாகம்மாள் மில்ஸ் லிமிடெட் என்ற நூற்பாலையில் சுமார் 370 தொழிலாளர்கள் பணியில் உள்ளனர். இந்த ஆலையில் குமரி மாவட்ட மில் தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யூ), குமரி, நெல்லை ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் டி.என்.டி.யு.சி, நாகம்மாள் மில்ஸ் ஸ்டாப், ஜாபர்ஸ் அண்ட் எம்பிளாயீஸ் யூனியன், குமரி மாவட்ட நூற்பாலை தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (தொ.மு.பே) ஆகிய நான்கு தொழிற்சங்கள் இயங்குகின்றன.

1985-86ம் ஆண்டு போனஸ் பிரச்சினையில் தொழிற் சங்கங்கள் முன்னதாகவே வேலை நிறுத்த அறிவிப்புகள் கொடுத்து 27-10-1986 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாக தெரிவித்திருந்தன. இந்தப் பிரச்சினையில் நாகர் கோவில் தொழிலாளர் துறை உதவி ஆணையர் (சமரசம்) முன்பு முதலில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பயன் அளிக்காத தினால், திருநெல்வேலி தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்